அந்த வியாபாரிகளை 'பிளாக் லிஸ்டில்' போட்டு, அவர்களைப் பற்றி பத்திரிகைகளிலும் ரேடியோவிலும் அம்பலப்படுத்த ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, 'பிளாக் லிஸ்ட்' என்று கொண்டுவந்து பட்டியல்போட்டு பத்திரிகைகளில் அறிவிக்கும் நடைமுறை கையாளப்படவில்லை. ஆனால், இது சம்பந்தமான வழக்குகள் நடைபெறும்போதும் தண்டனை அளிக்கும்போதும் அந்த விவரங்கள் பத்திரிகைகளில் வருகின்றன. யார், யார் என்னென்ன குற்றங்கள் செய்தார்கள் என்றும், என்னென்ன தண்டனைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டன என்றும் மக்கள் அறிந்து கொள்வதற்காகவும் அவர்களைப்பற்றி மக்கள் புரிந்துகொள்வதற்காகவும் பத்திரிகைகளில் வெளியிடுகிறார்கள்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: தலைவரவர்களே, இப்போது கடைகளிலே விலைப்பட்டியல் வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஓட்டல்களிலும் ஒவ்வொரு ஓட்டலிலும் ஒரே பலகாரத்திற்கு ஒவ்வொருமாதிரியான விலை வைத்து விற்கிறார்கள்; ஓட்டல்களில் விலைப்பட்டியல் வைக்காததுதான் இதற்குக் காரணம். ஆகவே, எல்லா ஓட்டல்களிலும் பலகாரங்களின் விலைப் பட்டியலை வைக்க வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஓட்டல்களிலே கட்டாயமாக விலைப்பட்டியல் வைக்க வேண்டுமா என்பது பற்றிய குறிப்பு தற்போது என்னிடம் இல்லை. அப்படி இருக்குமானால் அதைக் கண்காணிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இராஜபாளையத்தில் கைப்பற்றப்பட்ட மண்ணெண்ணெய்.

* வினா எண் 322—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 27—12—1980 தேதி இராஜபாளையத்தில் பதுக்கி வைக்கப்பட்டு இருந்த சுமார் 38,000 லிட்டர் மண்ணெண்ணெய் தனியார் கடைகளிலிருந்து சிவில் சப்ளை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் சம்பந்தப்பட்டவர்களின் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

1982 மார்ச் 3]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ) இராசபாளையத்தில் 20—12—1980 அன்று மூன்று தனியார் கடைகளிலிருந்து 20,750 லிட்டர் மண்ணெண்ணெய் சரிவர கணக்கு வைக்கவில்லை என்ற காரணமாக உணவுத்துறை குற்றப் புலனாய்வு காவல் துறையால் கைப்பற்றப்பட்டது. அவற்றில் இரண்டு வியாபாரிகளின் கணக்குகள் சரியானவை யென்று கண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் கைப்பற்றப்பட்ட மண்ணெண்ணெய் முழுதும் திருப்பிக் கொடுக்க ஆணையிட்டு திருப்பிக் கொடுக்கப்பட்டது. மற்றொரு வியாபாரியைப் பொறுத்தவரை அவர் பில்களில் குடும்பக்கார்டு எண்கள் குறிப்பிடவில்லையென்ற குற்றத்திற்காக விசாரணை செய்யப்பட்டு இக்குற்றத்தை மீண்டும் செய்யக்கூடாது என்று எச்சரிக்கப்பட்டார். கைப்பற்றிய மண்ணெண்ணெயும் திருப்பிக் கொடுக்கப் பட்டது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, குடும்பக் கார்டுகள் மூலம் பொதுமக்களுக்கு கொடுக்க வேண்டிய மண்ணெண்ணெயை இப்படிப் பதுக்கியவர்களை அரசாங்கம் எச்சரிக்கை செய்து விட்டுவிட்டால் மீண்டும் அந்தப் பதுக்கல் பேர்வழிகளுக்கு அரசாங்கம் எச்சரித்து விட்டுவிடும் என்ற எண்ணத்தில் உற்சாகம் வந்துவிடும். தவறு செய்வதற்கு ஊக்கம் ஏற்பட்டு விடும். ஆகையால் அப்படிப் பதுக்கியவர்களையும், அரசுக்குத் தவறான தகவல் கொடுத்து, எச்சரித்து விட்டுவிட்ட மாவட்ட ஆட்சித் தலைவரையும் பாதுகாப்புச் சட்டப்படி கைதுசெய்து விசாரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட குற்றங்கள் நடைபெறுவதாகத் தெரியும் போது மாவட்ட ஆட்சித் தலைவர் விசாரணை செய்கிறார். அப்போது கிடைக்கின்ற தகவல்கள் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கிறார். முதல் தடவை செய்த தவறாக இருந்தால் குற்றவாளி மன்னிக்கப்படுகிறார். இரண்டாவது தடவை அதே குற்றத்தைச் செய்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தொடர்ந்து இப்படிப்பட்ட குற்றங்களை ஒருவர் செய்துவருகிறார் என்று தெரிய வந்தால் மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க போதுமான சட்டங்கள் இருக்கின்றன.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, சென்னை மாநகரில் வீதிகளில் எல்லாம் கைவண்டிகள் மூலம் மண்ணெண்ணெய் தெருத் தெருவாக விற்கப்படுகிறது. ஆனால் கிராமங்களில் விவசாயச் சங்கங்கள் மூலமாகத்தான் விற்பனை செய்யப்படுகிறது. 10 கிராமங்களுக்கு ஒரு விவசாயச் சங்கம்தான் இருக்கிறது. அதனால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகவே கிராமங்களிலும் கைவண்டிகளில் மண்ணெண்ணெயை விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றிய விவரம் தற்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

Centre's assistance towards Drought Relief.

* *Q.* No. 323—THIRU. R. UMANATH: Will the Hon. the Minister for Revenue te pleased o s a e—

(*a*) The to al assis ance to this Governmen has received from the Central Governmen owards drought relief and ;

(*b*) Th: details thereof?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) : வ ட்சி நிவாரணப் பணிகளுக்காக பல் வேறு இனங்களில் செலவிட உச்சவரம்பாக ரூ. 49.77 கோடி என்று மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது. இதுவரை மாநில அரசு 56 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, வறட்சி நிவாரணப் பணிகளுக்காக நம்முடைய அரசு 56 கோடி ரூபாய் செலவு செய் திருக்கிறது. ஆனால் மத்திய அரசு 47 கோடியே சொச்சம்தான் தந்திருக்கிறது. இப்படிக்கடுமையான வறட்சி போன்ற நிலைமை ஏற்பட்டு மாநில அரசுகள் நிதி இல்லாமல் கஷ்டப்படும்போது என்ன அளவுகோலைக் கொண்டு மத்திய அரசு உதவிப்பணத்தை நிர்ணயிக்கிறது ? எந்தவகையில் கொடுக்க வேண்டுமென்று ஏதாவது நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா ? 'நார்ம்ஸ்' ஏதாவது இருக்கிறதா ? அல்லது அவர்கள் இஷ்டம்போல் கொடுக்கலாமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.10)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, மாநிலங்களில் ஏற்படுகின்ற வறட்சி, வெள்ளம், புயல் போன்ற இயற்கை இடர்பாடுகளுக்காக நிவாரணத்தைப் பொறுத்தவரை யில் அந்தந்த மாநில அரசுகள் அவர்களுடைய தொகையில் சில பகுதிகளை ஒதுக்கவேண்டும் என்று சொல்லப்படுகின்றது. அதன்படி நம்முடைய மாநிலமும் 8.59 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டி உள்ளது. மாநில பட்ஜெட்டில் நிவாரணப் பணிகளுக்